ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

## நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ மானேய் நோக்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மானேய் நோக்கு ॥

திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியார்க்குத் தலைவி கூறுதல்

‡மானேய் நோக்கு நல்லீர்!⋆ வைகலும் வினையேன் மெலிய⋆
வானார் வண் கமுகும்⋆ மது மல்லிகை கமழும்⋆
தேனார் சோலைகள் சூழ்⋆ திருவல்லவாழ் உறையும்
கோனாரை⋆ அடியேன்⋆ அடிகூடுவதென்றுகொலோ (1)

என்றுகொல் தோழிமீர்காள்⋆ எம்மை நீர் நலிந்தென்செய்திரோ⋆
பொன் திகழ் புன்னை மகிழ்⋆ புது மாதவி மீதணவி⋆
தென்றல் மணம் கமழும்⋆ திருவல்லவாழ் நகருள்
நின்ற பிரான்⋆ அடிநீறு⋆ அடியோம் கொண்டு சூடுவதே (2)

சூடும் மலர்க்குழலீர்!⋆ துயராட்டியேனை மெலிய⋆
பாடுநல் வேதவொலி⋆ பரவைத் திரை போல் முழங்க⋆
மாடுயர்ந்தோமப் புகை கமழும்⋆ தண் திருவல்லவாழ்⋆
நீடுறைகின்ற பிரான்⋆ கழல் காண்டுங்கொல் நிச்சலுமே (3)

நிச்சலும் தோழிமீர்காள்!⋆ எம்மை நீர் நலிந்தென் செய்திரோ⋆
பச்சிலை நீள் கமுகும்⋆ பலவும் தெங்கும் வாழைகளும்⋆
மச்சணி மாடங்கள் மீதணவும்⋆ தண் திருவல்லவாழ்⋆
நச்சரவின் அணைமேல்⋆ நம்பிரானது நன்னலமே (4)

நன்னலத் தோழிமீர்காள்!⋆ நல்ல அந்தணர் வேள்விப் புகை⋆
மைந்நலங்கொண்டுயர் விண் மறைக்கும்⋆ தண் திருவல்லவாழ்⋆
கன்னலங்கட்டி தன்னைக்⋆ கனியை இன்னமுதம் தன்னை⋆
என்னலங்கொள் சுடரை⋆ என்றுகொல் கண்கள் காண்பதுவே (5)

காண்பதெஞ்ஞான்று கொலோ⋆ வினையேன் கனிவாய் மடவீர்⋆
பாண் குரல் வண்டினொடு⋆ பசுந் தென்றலும் ஆகி எங்கும்⋆

www.prapatti.com

சேண் சினை ஓங்கு மரச்⋆ செழுங்கானல் திருவல்லவாழ்⋆
மாண் குறள் கோலப் பிரான்⋆ மலர்த் தாமரைப் பாதங்களே (6)

பாதங்கள் மேலணி⋆ பூந்தொழக் கூடுங்கொல் பாவை நல்லீர்⋆
ஓத நெடுந்தடத்துள்⋆ உயர் தாமரை செங்கழுநீர்⋆
மாதர்கள் வாண்முகமும்⋆ கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ்⋆
நாதன் இஞ்ஞாலம் உண்ட⋆ நம் பிரான் தன்னை நாள்தொறுமே (7)

நாள்தொறும் வீடின்றியே⋆ தொழக் கூடுங்கொல் நன்னுதலீர்⋆
ஆடுறு தீங்கரும்பும்⋆ விளை செந்நெலும் ஆகி எங்கும்⋆
மாடுறு பூந்தடம் சேர்⋆ வயல் சூழ் தண் திருவல்லவாழ்⋆
நீடுறைகின்ற பிரான்⋆ நிலம் தாவிய நீள் கழலே (8)

கழல் வளை பூரிப்ப யாம் கண்டு⋆ கைதொழக் கூடுங்கொலோ⋆
குழல் என்ன யாழும் என்னக்⋆ குளிர் சோலையுள் தேன் அருந்தி⋆
மழலை வரி வண்டுகள் இசை பாடும்⋆ திருவல்லவாழ்⋆
சுழலின் மலி சக்கரப் பெருமான்⋆ அது தொல்லருளே (9)

தொல்லருள் நல் வினையால்⋆ சொலக் கூடுங்கொல் தோழிமீர்காள்⋆
தொல்லருள் மண்ணும் விண்ணும்⋆ தொழ நின்ற திருநகரம்⋆
நல்லருள் ஆயிரவர்⋆ நலன் ஏந்தும் திருவல்லவாழ்⋆
நல்லருள் நம் பெருமான்⋆ நாராயணன் நாமங்களே (10)

‡நாமங்கள் ஆயிரம் உடைய⋆ நம் பெருமான் அடி மேல்⋆
சேமம் கொள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் தெரிந்துரைத்த⋆
நாமங்கள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் திருவல்லவாழ்⋆
சேமம் கொள் தென் நகர்மேல்⋆ செப்புவார் சிறந்தார் பிறந்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com